<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

அசல் வழக்கு எண். 239/2020

இன்று 2024 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 05 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.T.பிரவின்குமார், B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

பெயர் : குமார்

தந்தை பெயர் : கிருஷ்ணசாமி

<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவை ஆகும். அவற்றை நான் நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன்.

கடந்த 29-01-1996ம் தேதியிட்ட கிரய பத்திரத்தின் அசல் **வா.சா.ஆ.1** ஆகும். கடந்த 17-10-2019ம் தேதியிட்ட உறுதிமொழி பத்திரத்தின் அசல் **வா.சா.ஆ.2** ஆகும். கடந்த 04-07-2020ம் தேதியிட்ட பட்டா எண்7432ன் கணினி நகல் மற்றும் அ பதிவேட்டின் நகல் **வா.சா.ஆ.3** ஆகும். கடந்த 21-10-2019ம் தேதியிட்ட பட்டா மாறுதல் தொடர்பான உத்தரவின் கணினி நகல் **வா.சா.ஆ.4** ஆகும். கடந்த 18-10-2019ம் தேதியிட்ட பாக சாசன பத்திரத்தின் கணினி நகல் **வா.சா.ஆ.5** ஆகும். என்னுடைய ஆதார் அட்டையின் நகல் **வா.சா.ஆ.6** ஆகும். கடந்த 25-07-2020ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு **வா.சா.ஆ.7** ஆகும். கடந்த 08-09-2020ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு **வா.சா.ஆ.8** ஆகும். எனக்கு சார்வு செய்யப்பட்ட கேவியட் மனுவின் நகல் **வா.சா.ஆ.9** ஆகும்.

கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க தொடர் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

T PRAVEEN KUMAR

Digitally signed by T PRAVEEN KUMAR
Date: 2024.11.05 17:16:39 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.